**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**...**

**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**

**CC No. 130/2017**

Deposition of the witness for : Prosecution **PW**4
Name : **குமாரசாமி**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (27.01.2026)

Accused present

<u>முதல் விசாரணை</u>

நான் குற்றாலத்தில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. பராசக்தி நகரில் எனக்கு வீடு உள்ளதால் போலீசார் என்னை சாட்சியாக போட்டுள்ளார்கள். எனக்கு வழக்கு விவரம் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சி வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 09.03.2017 ம் தேதி காலை 10.00 மணிக்கு குற்றாலம் பராசக்தி நகரில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், அற்புதஅருள்ராஜ் என்பவரும் கையெழுத்து செய்ததாக கூறிவிட்டு தற்போது அதற்குமாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA — Digitally signed by S ILAIYARAJA Date: 2026.01.27 18:10:38 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 130/2017**

Deposition of the witness for Prosecution **PW**3
Name : **சிமியோன்**
Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (27.01.2026)

Accused present

<u>முதல் விசாரணை</u>

நான் ஆசீர்வாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 09.03.2017 ஆம் தேதி நான் லோடுமேனாக வேலை செய்து வந்தேன். நானும், லட்சுமணன் என்பவரும் குற்றாலம் பராசக்தி நகர் என்ற இடத்தில் டிப்பர் லாரியில் லோடு தட்டுவதற்காக வந்திருந்தோம் காலை 06:45 மணி அளவில் டிப்பர் லாரியில் ஒரு கதவை நான் திறந்து கொண்டிருந்தேன். மற்றொரு சைடுல உள்ள டோரை லட்சுமணன் திறந்து கொண்டிருந்தார் அப்போது ஆஜர் எதிரி டிப்பரை தூக்கினார் அது தாழ்வான கரண்ட் லைனில் பட்டு லட்சுமணன் மீது கரண்டு சாக் அடித்துவிட்டது அதில் லட்சுமணன் கீழே விழுந்து விட்டார். நானும், ஆஜர் எதிரியும் அதே டிப்பர் லாரியில் லட்சுமணனை தூக்கிகொண்டு தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். மருத்துவர் பார்த்துவிட்டு வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார். நான் லட்சுமணனின் வீட்டிற்கு தகவல் சொன்னேன். லட்சுமணன் மனைவியும், அவரது உறவினர்களும் வந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

டிப்பர் லாரியை நானும், லட்சுமணனும் ஒரு ஒரு சைடாக திறந்து

கொண்டிருந்தோம் என்றால் சரிதான். டிப்பர் லாரியில் முன்பகுதி மேலே செல்வது என்று சென்றவுடன் நான் துறந்துவிட்டு தூர வந்து விட்டேன் என்றால் சரிதான் தள்ளி நின்றேன். அவர் மேலே போவதை கவனிக்காமல் அதை பிடித்துக் கொண்டிருந்ததால் அவர் மீது சாக்கடித்து விட்டது என்றால் சரிதான். அந்த நேரத்தில் ஓட்டுனர் உள்ளே இருந்தார் என்றால் சரிதான். அப்போது வண்டிக்கு உள்ளே எங்களைத் தவிர வேறு யாராவது உள்ளே இருந்தார்களா என்றால் யாருமில்லை. டிப்பர் லாரி மேலே போய்க் கொண்டிருக்கும் போது ஓட்டுநர் அதனை இயக்கினால் தான் மேலே செல்லும் என்றால் சரிதான். அப்படி இயக்கும்போது மின்சார கம்பி டிப்பரில் பட்டு லட்சுமணனுக்கு ஷாக் அடித்ததால் டிரைவருக்கும் ஷாக் அடிக்கும் என்றால் சரிதான். ஆனால் டிரைவருக்கு சாக் அடிக்குது இல்லை சாக் அடிக்கவோ செய்யவில்லை என்றால் கீழே கால்மிதி இருப்பதால் அவருக்கு டைரக்டாக கரண்ட் செல்லாது. அந்த நேரத்தில் கால்மிதி ஃபுட் ரெஸ்ட் போடப்பட்டிருந்ததா? என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாதாரணமாக ஓட்டுநர் டிப்பர் லாரியில் கையை பிடித்துக் கொண்டு டிப்பர் தூக்கிறதா என்பதை பின்னாடி சாதாரண ஓட்ட வழியாகத்தான் பார்ப்பார் என்றால் சரிதான். அப்படி பிடித்துக் கொண்டு ஓட்டுநர் தூக்கிகொண்டு இருந்தால் அவருக்கும் சாக்கடிக்கும் என்றால் சரிதான். அதனால் லட்சுமணன் அவரது கவனக்குறைவா தான் வண்டியில் டிப்பர் மேலே போவதை கவனிக்காமல் வண்டியில் தொற்றி பிடித்து திறந்ததால் அவருக்கு ஷாக் அடித்தது என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல் சொல்ற நேரத்தில், சொன்ன சமயத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும், காயம் பட்ட நபர் எனக்கு சொந்தக்காரர் உறவினர் என்பதாலும் நான் கூப்பிட்டு சென்றதாலும், அவருக்காக வேண்டி நடக்காத சம்பவத்தை நடந்ததாக அவரது கவனக்குறைவை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA — Digitally signed by S ILAIYARAJA Date: 2026.01.27 18:10:47 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 130/2017**

Deposition of the witness for Prosecution **PW**2
Name : **பாலசிங்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (27.01.2026)

Accused present
முதல் விசாரணை

நான் டானா ஊரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கில் இறந்து போன லட்சுமணன் எனது அக்கா மகன். 09.03.2017 ம் தேதி எனக்கு ஜெயமேரி போன் மூலமாக தகவல் சொன்னார். நான் அப்போது ஊரில் இருந்தேன். தனது கணவருக்கு விபத்து நடந்து விட்டதாகவும் உடனே வரும்படி கூறினார். நான் சம்பவம் கேள்விப்பட்டு நேரடியாக தென்காசி அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன் அப்போது லட்சுமணன் இறந்துவிட்டார். காலையில் லோடு ஏற்றி சென்ற இடத்தில் டிப்பரை தூக்கி விடும்போது டோரை திறந்து கொண்டிருக்கும்போது மேலே உள்ள கரண்ட் லைனில் டிப்பர் பட்டு இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். பின்னர் பிரேத பரிசோதனைக்கு பின்னர் பிரேதத்தை பெற்றுக் கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு நேரடியாக இந்த சம்பவம் தெரியாது என்றால் சரிதான். எனது மருமகன் லட்சுமணனின் மனைவி சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வண்டியை யாரு ஓட்டி சென்றார், யாருக்கு இறக்கப்போனார்கள், அந்த வீட்டின் ஓனர் யாரு என்ற எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது

போல், சொன்ன நேரத்தில், சொன்ன மாதிரி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், இறந்துபோன லட்சுமணன் என்பவரின் கவனக்குறைவினால் ஏற்பட்ட விபத்தை இழப்பீடு பெரும் முறைக்காக அவர்கள் போட்டு வைத்த புகார் மனுவிற்கு, முதல் தகவல் அறிக்கைக்கும் அனுசரித்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.01.27 18:10:53 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 130/2017**

Deposition of the witness for Prosecution **PW**1
Name : **ஜெயமதி அன்னத்தாய்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (27.01.2026)

Accused present

முதல் விசாரணை

நான் மாதாபுரத்தில் குடியிருந்து பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 09.03.2017 ஆம் தேதி நான் ஊரில் இருந்தேன். சுமார் 07.45 மணிக்கு சிமியோன் என்பவர் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். டிப்பர் லாரியில் எதிரி ஓட்டி சென்றபோது லோடுமேனாக எனது கணவர் லட்சுமணன் வேலைக்கு சென்ற போது பராசக்தி கல்லூரிக்கு அருகில் டிப்பர் லாரியை கொட்டும்போது பின்னால் உள்ள டோரை ஓப்பன் செய்யும்போது டிரைவரின் கவனக்குறைவால் டிப்பர் லாரி மேலே சென்ற மின் கம்பத்தில் பட்டு என் கணவர் மீது மின்சாரம் தாக்கி விட்டதாக தகவல் கேள்விப்பட்டு நான் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று எனது கணவரை பார்த்தபோது அவர் வரும் வழியில் இறந்து விட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். நான் குற்றாலம் காவல் நிலையம் சென்று நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடைய தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். பிரேத பரிசோதனைக்கு பின்னர் நல்லடக்கம் செய்வதற்காக எனது கணவரின் பிரேதத்தை பெற்றுக் கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக நேரடியாக தெரியாது நான் ஊரில் இருந்தேன். வண்டியை பிலிப்ஸ் ஓட்டி வந்தாரா? ஜீசஸ் ராஜா ஓட்டி வந்தாரா? என்று எனக்கு சிமியோன் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். அதேபோல் எந்த இடத்தில் விபத்து நடந்தது என்று நான் போய் நேரில் பார்க்கவில்லை அவர்கள் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடைபெறும் பொழுது டிரைவர் உள்ளே இருந்தாரா? வெளியே இருந்தாரா? இல்லை அவரும் டிப்பர் லாரி பாடியிலிருந்தாரா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் போக அந்த டிப்பர் லாரியில் ஜீசஸ் ராஜா, சிமியோன் ஆகியோர் இருந்திருந்தால் கூட மின்சாரம் தாக்கி இருக்கும் என்றால் சரிதான். நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் இறந்து போன நபர் எனது கணவர் என்பதாலும், பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் யாருக்காக டிப்பர் லாரியில் கொட்டப்போனார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ராயபாண்டிக்கு கொட்டப் போனார்கள் அந்த வீட்டில் ஓனர் கொத்தனார் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.01.27 18:10:59 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai